பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆ தை மீ 05 உ. வெள்ளிக்கிழமை (18-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 52

# வளைகுடாவில் அழிவுப்போர்; ஈராக் மீது உக்கிரத் தாக்குதல்

வளைகுடா போர் பற்றி மேலும் செய்திகள் 2, 3, 4 ஆம் பக்கங்களில்

## பன்னாட்டுப் படைகள் மூர்க்கம்

லண்டன், ஜனவரி 18

வளைகுடாவில் அழிவுப் போர் நேற்று வெடித்தது. ஈராக் மீது பன்னாட்டுப் படைகள் மூர்க்கத்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டன.

ஈராக்கின் ஆகாயப் பிரதேசம் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு முதலாவது தாக்குதலை பன்னாட்டுப் படைகள் ஆரம்பித்தன.

அணி, அணியாகச் சென்ற விமானங்கள் மாறி, மாறி ஈராக்கின் இராணுவ கேந்திர நிலையங்களின் மீது குண்டு மாரி பொழிந்தன.

தொடர்ந்து அலை, அலையாக ஏவுகணைகள் சீறிப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பக்தாத் நகரம் எங்கும் ஒரே புகை மண்டலம்

### சதாம் மாளிகை மீதும் குண்டு

லண்டன், ஜன. 18

பன்னாட்டுப் படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்கள் காரணமாக ஈராக் தலைநகர் பக்தாத்தின் நகரவீதிகள் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பக்தாத் நகரம் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தது.

ஜனாதிபதி சதாம் ஹுசேனின் மாளிகை குண்டு வீச்சுக்கு இலக்கானது. இதனை பக்தாத் அரசும் ஒப்புக் கொண்டுள்ளது.

பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் தரித்து நின்ற ஈராக்கிய விமானங்கள் பல வான்தாக்குதலினால் சேதமடைந்தன என்று அபுதாபி வானொலி அறிவித்தது.

இதேவேளை ஈராக்கின் ஆளும் பாத் கட்சியின் பக்தாத் தலைமையகமும் நேற்று விமானத் தாக்குதலுக்கு இலக்கானது என்று தெரிவிக்கப்பட்டது.

## இஸ்ரவேல் இன்னும் சம்பந்தப்படவில்லை

லண்டன், ஜன. 18

போர் ஆரம்பமானால் இஸ்ரவேல் மீதுதான் முதன் முதல் தாக்குதல் நடத்துவோம் என்று ஈராக் முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தபோதும் இன்று அதிகாலை இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இஸ்ரவேல் தாக்குதல் எதற்கும் இலக்காகவில்லை.

இஸ்ரவேல் படைகளும் போர் நடவடிக்கைகளில் சம்பந்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்கா விரைவில் வருந்தும் நிலை வரும்!

பக்தாத், ஜன. 18

ஈராக் மீது போர் தொடுத்ததற்காக அமெரிக்கா விரைவில் வருந்தப்படும்.

— இவ்வாறு பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

"குவைத்தைக் காப்பாற்றும் பணியில், குவைத்தை பெரும் போர்க்களமாக ஈராக் படையினர் மாற்றி அமைப்பர்."

"இந்த யுத்தத்தில் ஈராக் சரணடைய மாட்டாது; எதிர்த்து நின்று வெற்றி அடையும்" — இவ்வாறு அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

## அரபு கெரில்லாக்கள் தாக்கலாம் என அச்சம்

லண்டன், ஜன. 18

வளைகுடா போரின் தாக்கம் உலகின் பல பகுதிகளிலும் எதிரொலிக்கும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் எச்சரித்து உள்ளது.

இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து, அரபு கெரில்லாக்கள் உலகின் முக்கிய கேந்திர நகரங்களில் தாக்குதலை நடத்தலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## குண்டு வீச்சுக் குறித்து உள்ளூர் கணிப்பு!

கொழும்பு, ஜன. 18

நேற்று அதிகாலை மூன்றுமணி நேரம் ஈராக் மற்றும் குவைத்மீது பன்னாட்டுப் படைகள் நடத்திய முதற்கட்டத் தாக்குதல்களின்போதுமட்டும் 18 ஆயிரம் மெற்றிக் தொன் வெடிமருந்துகளைக்கொண்ட குண்டுகள் வீசப்பட்டன.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் சீனச் சகடை விமானம் வீசும் பாரிய குண்டுகள் சுமார் முன்னூறு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வில்கம்விகாரையில் 3 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 18

திருகோணமலை வில்கம் விகாரைப் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

பைரவன் (இ. பாஸ்கரன் - துவரங்காடு, அலஸ்தோட்டம்), மாயவன் (நா. புனிதராஜா - குச்சவெளி), சாலமன் (மயில்வாகனம் இராசலிங்கம் - குச்சவெளி) ஆகியோரே வீரமரணமடைந்தவர்.

இந்த மோதல் சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை. (உ)

## கிழக்கில் நடந்த தாக்குதல் சம்பவங்கள்

கடந்த திங்களன்று மட்டக்களப்பு மாவட்டம் கன்னிச்சை, வடமுனை முகாமிலிருந்து பெரியமியாங்குளம், சின்னமியாங்குளம் பகுதிகளுக்கு படையினர் சென்றபோது அங்கு விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சண்டை நிகழ்ந்தது.

அப்போது ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

இதேதினம் இப்பகுதிகளில் பொதுமக்களின் 185 குடிசைகளைப் படையினர் எரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த நாள் பெரியமியாங்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மண்ணெண்ணெய்; மர்ம வியாபாரம்!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு, மண்ணெண்ணை சந்தைக்கு வருவதும், பின்னர் மறைவதும், மீண்டும் வருவதும் ஒரு மர்மமான காரியமாகிவிட்டது.

கடந்த ஜூனில் இராணுவத் தாக்குதல் ஆரம்பித்த ஒரு சில மாதங்கள் கொழும்பிலிருந்து மண்ணெண்ணையை இங்கு எடுத்து வருவது கஷ்டமான காரியமாக இருந்தது உண்மை தான்.

ஆனால் நவம்பர் மாத இறுதியில் அதனைக் கொண்டு வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கிவிட்டது. [கப்பலிலும் மண்ணெண்ணை ஓரளவு வந்து சேர்ந்தது.]

அதன் பின் லொறிகளில் தாராளமாக மண்ணெண்ணை வந்து சேர்ந்தது. [ஒரு சமயத்தில் போத்தல் 30 ரூபாவுக்கு விற்பனையானது.

ஆனால் வளைகுடா நெருக்கடி ... கட்டம் நெருங்

[... பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



"மண்ணெண்ணையை மறைக்கிற முச்சரன்மாரை மடக்கிப் பிடிக்க ...

## ராணுவம் மீது தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 18

கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பு மாவட்டம் கொம்மாந்துறை, செங்கலடி இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் மகிழவெட்டுவான், சிவத்தப்பாலம் ஆகிய பகுதிகளுக்குச் சென்றபோது அப்பகுதியில் கடும் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த நாள் திங்களன்றும் அப்பகுதியில் மோதல் இடம் பெற்றது. மோதலின் பின்னர் மகிழவெட்டுவான் ஆற்றைக் கடந்து செல்கையில் நீரில் மூழ்கி நிதன் என்ற போராளி மரணமானார். (உ)

## யான்-ஓயாவில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 18

நேற்று முன்தினம் நள்ளிரவு 11-30 மணியளவில் திருகோணமலை மாவட்டம் யான்-ஓயா பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் சுமார் இரண்டு மணி நேரம் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலில் அரச படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் குலேஸ் [கண்ணன் - திருமலை] வீரமரணமடைந்தார். (உ)

## கிழக்கில் 2 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 18

கிழக்கு மாகாணத்தில் மண்டூர், தொப்பிகல மற்றும் வடமுனை பகுதிகளில் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதலின் போது 2 படையினர் உயிரிழந்தனர்.

ஐந்து படையினர் அப்போது காயமடைந்தனர்.

இத் தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [ஒ-எ]

## ஓய்வு பெற்றவர்களுக்கு 1 வருடம் மீள் நியமனம்

அரசின் புதிய சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற விண்ணப்பித்தவர்களில் இருந்து, பலருக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்கப்பட இருக்கிறது.

இது சம்பந்தமாக அமைச்சரவையால் எடுக்கப்பட்ட முடிவு, சுற்று நிருபம் மூலம் சகல அமைச்சுகளின் செயலாளர்களுக்கும், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பில் நம்பகமான வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஒருவரின் சேவை மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் எனக் கருதினால் மட்டுமே மீள்-நியமனம் வழங்கப்படும். ஒப்பந்தகாலம் ஒரு வருடத்துக்கு மேற்படாது இருக்கும்.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மீள் நியமனம் வழங்குதல் கொழும்பில் நடைமுறைக்கு வந்துள்ளதாக அறியவருகிறது.

மேற்படி சுற்று நிருபம் இன்னமும் யாழ். மாவட்டத்துக்கு வந்து சேரவில்லை.

சுற்றுநிருபம் வந்து சேர்ந்ததும் யாழ். மாவட்டத்தில் உள்ள பல அரச திணைக்களங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்ற, பல அநுபவம்

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் குறித்து வெளியான தகவல்கள்

★ பக்தாத்தில் ஈராக் பாதுகாப்பு அமைச்சின் தலைமை அலுவலகம் மூன்று தடவைகள் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்கானது.

★ குவைத்தில் உள்ள இரண்டு விமானத் தளங்கள் பன்னாட்டுப் படைகளின் ஆகாயத் தாக்குதலில் பலத்த சேதமடைந்தன.

★ ஈராக் படைகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட 14 எதிரி விமானங்களில் 9 பக்தாத் நகரில் வீழ்ந்தன என்றும் எஞ்சிய 5 விமானங்கள் பஸ்ரா நகரில் விழுந்தன என்றும் ஈராக் இராணுவத் தலைமையகம் அறிவித்தது. இதனை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு மறுத்துவிட்டது.

★ குவைத்தில் ஈராக் இராணுவ நிலைகள் மீது 12 பிரெஞ்சு ஜாகுவர் போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின என்று பாரிஸில் அறிவிக்கப்பட்டது.

## 44 விமானங்கள் சுடப்பட்டன

★ குவைத் மீது ஆகாயத் தாக்குதல் நடத்திய போர் விமானங்களில் பிரெஞ்சு ஜாகுவர் விமானங்கள் உட்பட 4 விமானங்கள் ஈராக் படைகளினால் சுடப்பட்டன. அவற்றில் ஒரு விமானம் பலத்த சேதமடைந்தது. விமானிகள் எவரும் உயிரிழக்கவில்லை- இவ்வாறு பாரிஸில் பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் தகவல் வெளியிட்டார்.

★ ஆனால் 44 எதிரி விமானங்களை ஈராக் விமானப் படை சுட்டு வீழ்த்தியதாக பக்தாத் அரசு நேற்று அறிவித்தது. ஆனால் தாங்கள் 3 விமானங்களையே இழந்ததாக பன்னாட்டு படைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

★ வளைகுடா போரில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் தரப்பில் இரண்டு போர் விமானங்கள் காணாமற் போய்விட்டன என்று அறிவிக்கப்பட்டது.

பிரிட்டனும் அமெரிக்காவும் தலா ஒரு போர்விமானத்தை இழந்துள்ளன. அவ்விமானங்களுடன், அவற்றில் இருந்த வீரர்களும் காணாமற் போய் விட்டனர் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

★ பிரிட்டிஷ் போர் விமானம் ஒன்று இரண்டு வீரர்களுடன் காணாமற் போய் விட்டது என்று பாதுகாப்பு அமைச்சர் ரொம்கிங் நேற்று லண்டனில் தெரிவித்தார்.

ஈராக் மீது அதிகாலை நடத்தப்பட்ட ஆகாயத் தாக்குதலின்போது பிரிட்டிஷ் போர் விமானம் ஒன்றின் என்ஜின் தீப்பற்றிக் கொண்டது. அதன் பின்னர் அந்த விமானத்துடன் அதில் இருந்த இரண்டு வீரர்களும் காணாமற் போய் விட்டனர். —இப்படி பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ரொம்கிங் சொன்னார்.

## அமெரிக்கா எச்சரிக்கை

★ இரசாயன மற்றும் நுண்ணுயிர்க் கிருமி ஆயுதங்களை ஈராக் பாவிக்கத் தொடங்கினால், வளைகுடாப் போர் பயங்கரமான முறையில் விஸ்தரிக்கப்படும் ஆபத்து ஏற்படும் என்று அமெரிக்கா எச்சரித்தது.

★ வளைகுடா போர் ஆரம்பமானதை அடுத்து சோவியத் யூனியன், தனது தென் பகுதியில் நிலை கொண்டுள்ள ஆயுதப் படையினரை உஷார் நிலையில் வைத்துள்ளது.

★ அல்ஜீரியா தனது ஆயுதப் படையினரை உஷார் நிலையில் இருக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

★ ஈராக் தனது ஆயுதப் படைகளுக்கு புதிதாக ஆட் சேர்க்கும் நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளது. 34—37 வயதுக்குட்பட்ட ஆண்கள் அனைவரும் ஆயுதப்படையில் உடனடியாகச் சேரும்படி பக்தாத் அரசு உத்தரவிட்டது.

★ சவூதிஅரேபியாவில் நிலைகொண்டுள்ள பன்னாட்டுப் படைகள் குவைத்தின் எல்லையை நோக்கி நகரத் தொடங்கி இருப்பதாக போர் முனையில் இருந்து அமெரிக்கச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

★ போரில் இதுவரை உயிரிழந்த பொது மக்களின் எண்ணிக்கையை வெளியிட அமெரிக்க தரப்பு மறுத்துவிட்டது.

★ வளைகுடாவில் உள்ள அமெரிக்க படைகளின் பிரதம தளபதியுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேரடி தொடர்பு வைத்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

## வெடி கொளுத்தி மகிழ்ச்சி

★ போர் ஆரம்பமான செய்தி கேட்டு பஹ்ரைனிலும் தென்இந்தியாவிலும் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

★ பிடிபடும் எதிரிப் படையினரைக் கொல்ல வேண்டாம் என்று தனது மக்களையும் படையினரையும் ஈராக் அரசு கேட்டுக்கொண்டது.

★ ஜனாதிபதி சதாம் ஹுசேன், முதல் தாக்குதலின் பின்னர் நேற்று பக்தாத் நகர வீதி ஒன்றில் நடந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது என்று ஒரு செய்தி தெரிவித்தது.

## பாப்பரசர் பிரார்த்தனை

★ வளைகுடா போர் நிறுத்தப்பட்டு சமாதானம் தோன்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர் பிரார்த்தனை ஒன்றை பரிசுத்த பாப்பரசர் நேற்று ஆரம்பித்தார்.

★ பன்னாட்டுப் படைகளின் ஆகாயத் தாக்குதலின் போது பக்தாத்தின் ஜனாதிபதி மாளிகை அருகில் பலத்த சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது.

மாளிகைக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி விவரம் தெரியவில்லை என்று பக்தாத்தில் உள்ள அமெரிக்க செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

# கொட்டும் மழையிலும் கால்கோள் விழா!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் முதல் கால் நிகழ்ச்சிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

நேற்றுக் காலை 11 மணியளவில் கொட்டும் மழையின் மத்தியில் மாணவர்கள் அணிவகுத்து நிற்க கல்லூரிக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து நூற்றாண்டு நினைவுக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் (கால்கோள் விழா) இடம்பெற்றது.

முன்னதாக நேற்றுக்காலை 9 மணியளவில் வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் இருந்து அடிக்கல் நாட்டுவதற்கான மங்கலப் பொருட்கள் ஊர்வலமாக கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டன.

நேற்றைய வைபவங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் கல்லூரி அதிபர்கள், கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அதிகாரிகள் பழைய மாணவர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் உட்படப் பலர் நூற்றாண்டு விழாவினை ஒட்டி ஆசியுரை வழங்கினர். (உ-5)

# ஜூன் மாதத்துக்குப்பின் விசேட லீவு கிடையாது

## கடமைக்குச் செல்லாதோருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 18

இராணுவத் தாக்குதல் ஆரம்பமான ஜூன் மாதம் தொடக்கம் கடந்த டிசம்பர் வரை கடமைக்குச் சமூகமளிக்காத சுகாதாரப் பகுதி ஊழியர்கள் எவருக்கும் விசேடலீவு வழங்கக்கூடாது.

கடமைக்கு வராத நாட்கள் ஊழியர்களின் சொந்த லீவில் கழிக்கப்பட்டு மிகுதிநாட்கள் சம்பளமற்ற லீவாகக் கருதப்படவேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சு வடக்கு - கிழக்கில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமான சுற்று நிருபம், யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கும் வந்துள்ளது.

ஊழியர்கள் எவரும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கி இருந்திருப்பின் அதற்கான அத்தாட்சிக் கடிதத்தைச் சமர்ப்பிக்கவேண்டும்.

நடப்பு வருடத்திலும் 1991 இலும்] இயல்பு நிலை குழப்பும் பட்சத்திலும், இதே நடைமுறையையே கடைப்பிடிக்க வேண்டும் என்று சுற்று நிருபத்தில் தெளிவு படுத்தப்பட்டிருப்பதாக யாழ். ஆஸ்பத்திரி நிர்வாக அதிகாரி திரு. கே. பத்மநாதன் உதயனுக்குத் தெரிவித்தார். [அ-15]

# கேரதீவு 'ஜெட்டி'யில் பயணிகள் படாதபாடு

பூநகரி, ஜன 18

கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் பல பகுதிகளில் இருந்தும் சங்குப்பிட்டி, கேரதீவு இறங்குதுறைகளில் (ஜெட்டிகளில்) கூடிய பயணிகள் நேற்று மழையில் நனைந்து பெரும் கஷ்டமுற்றனர்.

அதேபோல, யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்தவர்கள் பாடும் அதே கதிதான்.

கொழும்பில் இருந்து வெகு சிரமத்தின் மத்தியில் மூடை முடிச்சுகளுடன் வந்தவர்கள் மழையில் நனைந்து தோய்ந்து படாதபாடு பட்டனர்.

சைக்கிள் வியாபாரிகளின் நிலையும் பரிதாபத்துக்குரியதாக இருந்தது. [ஒ]

## வளைகுடாவில் அழிவு----

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாய்ந்து ஈராக் பிரதேசங்களில் வீழ்ந்து வெடித்தன.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் பன்னாட்டுப் படைகளின் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டதை அடுத்து போர் தீவிரமடைந்தது.

இன்று அதிகாலை] இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பன்னாட்டுப் படைகளின் வான் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமிருந்தன.

நேற்று முதல் நாள் போரில் ஈராக்படைகளின பதில் தாக்குதல் பாரதூரமானதாக இருக்கவில்லை என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

ஈராக்கின் ராடார் நிலையங்களைத் தாக்கி அழித்ததன் மூலமும் —

''எலக்ட்ரானிக் சமிக்ஞைகளை'' அனுப்பி, ராடார்களைக் குழப்பியதன் மூலமும்—

ஈராக் தனது ஆகாயப் பிராந்தியத்தில் கொண்டிருந்த ஆதிக்கம் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஈராக்கின் ஆகாயப் பிரதேசத்தை பன்னாட்டுப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன என்று அமெரிக்க தரப்பில் கூறப்பட்டது.

ஈராக்கின் ஆகாய பாதுகாப்புத் திட்டம் செயலிழந்து விட்டதாகவும் அமெரிக்க தரப்பு அறிவித்துள்ளது.

உலக சரித்திரத்திலேயே ஒரு யுத்தத்தின் போது இடம்பெறாத அளவு ஆகாயத் தாக்குதல் ஈராக் மற்றும் குவைத் மீது நேற்றில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமெரிக்க படைகளின் பிரதம தளபதி தெரிவித்தார்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின போது பாவிக்கப்படாத பல நவீன ஆயுதங்கள் இப்போது வளைகுடா போரில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அமெரிக்க பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்தனர்.

பக்தாத்தில் இருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் நிலை கொண்டுள்ளன என்றும்—

அவற்றில் இருந்தே ஏவுகணைத் தாக்குதல்களை பன்னாட்டுப் படைகள் மேற்கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈராக் தரையில் இருந்து தரைக்குப் பாயும் ஏவுகணைகளைக் கொண்டு பன்னாட்டுப் படைகள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றது. (உ-ஏ)

## ஓய்வு பெற்ற--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்த உத்தியோகத்தர்கள் மீள்நியமனம் பெற வசதி ஏற்படும் என அறியவருகிறது. (அ-6)

# ரஷ்யத் தலைவருடன் புஷ் இறுதி நேரத்தில் பேசினார்

போர் ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலம் முன்பதாக ஜனாதிபதி புஷ், சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

ஜனாதிபதி சதாம் ஹுசேனுடன் நேரடியாகத் தொலைபேசியில் பேசி, போரைத் தடுக்க ஆவன செய்யும்படி தான் அப்போது திரு புஷ்ஷிடம் கூறியதாக திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

தான் முடிந்த அளவு சமாதானத்துக்காகப் பாடுபட்டதாகவும் திரு. கோர்பச்சேவ் சொன்னார்.

# ஈராக் சேதம் குறித்து விவரம் இல்லை

லண்டன், ஜன. 18

ஈராக் மீது பன்னாட்டுப் படைகள் கட்டவிழ்த்து விட்டிருக்கும் தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிர், உடைமைச் சேதங்கள் குறித்து ஊர்ஜிதமான தகவல்கள் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

சேதங்கள் குறித்து பக்தாத் வானொலி விரிவான தகவல் எதனையும் வெளியிடவில்லை.

யுத்தம் ஒன்றை எதிர்நோக்கி, கடந்த ஐந்து மாதங்களாக தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை ஈராக மேற்கொண்டிருந்தாலும் —

ஈரானுடன் நடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் சண்டையிட்டு அனுபவம் பெற்றிருந்ததாலும் —

பன்னாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல்களினால் ஏற்படும் அழிவுகளில் இருந்து தன்னைப் பாதுகாக்கும் வலிமையை அது பெற்றிருக்கும் எனக்கருத்து வெளியிடப்பட்டது.

# பன்னாட்டுப் படையில் இத்தாலி, நெதர்லாந்து, கனடா

லண்டன், ஜன. 18

வளைகுடாப் போரில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளுடன் சேர்ந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்று இத்தாலியும், நெதர்லாந்தும், கனடாவும் நேற்று அறிவித்தன.

# உலக தலைவர்களின் கருத்து

லண்டன், ஜன. 18

★ ''உலக சரித்திரத்தில் இன்று ஒரு கறுப்பு நாள்''— இப்படி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் வளைகுடாப் போர் குறித்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

★ கூடிய விரைவில் வளைகுடா போர் முடிவடையும் என்று தான் நம்புவதாக பரிசுத்த பாப்பரசர் நேற்று நம்பிக்கை வெளியிட்டார்.

★ ''குவைத்தை சுதந்திர நாடாக மீண்டும் இயங்கச் செய்யவே வளைகுடா போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது''— என்று லிபிய ஜனாதிபதி கேர்னல் மும்மர் கடாபி குறிப்பிட்டார்.

★ ''அப்பாவி மக்கள் வளைகுடா போரில் அநியாயமாக உயிரிழக்கப்போகிறார்கள்'' என்று ஈரான் ஜனாதிபதி ரவ்ஸன்ஜானி கவலை தெரிவித்தார்.

ஈராக் — ஈரான் நாடுகளுக்கு இடையே எட்டு ஆண்டுகளாக நடந்த யுத்தத்தில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ''வளைகுடா போர் ஆரம்பித்துவிட்டது என்பதை அறிந்து நான் கவலையாகிவிட்டேன்.''

— இப்படி ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் கோல் தெரிவித்தார்.

## மண்ணெண்ணெய்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

குவைதக் கண்டு, மண்ணெண்ணை வியாபாரிகள் மாயம் செய்யத் தொடங்கினர்.

போர் மூளும் பட்சத்தில் பல மடங்கு விலை உயர்த்தி விற்கலாம் எனத் திட்டமிட்டு பெருவாரியான அளவு ம.எண்ணையைப் பதுக்கினர்.

அதனால் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு போத்தல் 50, 60 ரூபாவாக உயர்ந்தது.

நேற்று வளைகுடா யுத்தம் தொடங்கி விட்ட செய்தி கேட்டதும் காலையிலேயே போத்தல் 80 ரூபாவாகி 85 ரூபாவாகி நண்பகலில் 120 ரூபாவானது.

என்னே, வியாபாரிகள் என்ற மாயவர்களின் விளையாட்டு! மாலையில் மண்ணெண்ணை மாயமாக மறைந்தது. வளைகுடா யுத்தம் நீடித்தால் மேலும் கொள்ளைலாபம்அடிக்கலாம் என நினைத்து அதனைப் பதுக்கி விட்டார்கள்.

காலையில்மண்ணெண்ணை விற்ற பல இடங்களில் மாலையில் மக்கள் கேட்டபோது ''இல்லை'', ''முடிந்து விட்டது'' என்ற வார்த்தைகளே வந்தன!

யாரிடம் சொல்லி அழுவது என்று தெரியாமல் மக்கள் திகைத்தார்கள்! (அ-5-15)

## கிழக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குளத்தில் இருந்த இராணுவத்தினர் 9 ஆம் கட்டைப் பகுதி ஊடாகச் செல்கையில் மீண்டும் மோதல் இடம்பெற்றது.

அப்பகுதியில் ஐந்து மிதி வெடிகள் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

அப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் ஜனதாஸ் வீரமரணமடைந்தார்.

இதே தினம் குடாவெட்டை, பெருமாள்வெளி ஆகிய பகுதிகளிலும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## ஆவரங்காலில் விபத்து

யாழ்ப்பாணம், ஜன. 18

ஆவரங்காலில் நேற்று நடந்த லொறி — சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் கால் முறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலியில் உள்ள கடை ஒன்றில் ஊழியரான வீர ஜெய்சங்கர் [வயது 24] என்பவரே அந்த இளைஞர் ஆவார். [ஒ-15]

## குண்டுவீச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ வெடிமருந்தைக் கொண்டவை. இந்த சினச் சகடை குண்டுகளின் எண்ணிக்கையில் கணக்கிட்டால் 60 ஆயிரம் சினச்சகடைக் குண்டுகளுக்குச் சமனான வெடிமருந்துகள் முதற்கட்டத் தாக்குதலின்போது மட்டும் வீசப்பட்டிருக்கின்றன.

இக்குண்டுவீச்சு இன்று அதிகாலைவரை தொடர்ந்த வண்ணம் இருந்தது.

ஆனால் நேற்றைய தாக்குதல்களில் இரசாயன ஆயுதங்களோ, கதிர்வீச்சை ஏற்படுத்தும் ஆயுதங்களோ உபயோகிக்கப்பட்டதாக செய்திகள் ஏதும் வெளியாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போர் விளைவு

சமாதானத்துக்கு சந்தர்ப்பம் கொடுங்கள் என்று உலக நாடுகள், உலகத் தலைவர்கள், உலக மக்கள் விடுத்த அத்தனை வேண்டுதல்களையும், கோரிக்கைகளையும் புறக்கணித்து அமெரிக்காவும் ஈராக்கும் போரைத் தொடங்கிவிட்டன!

இந்த யுத்தம் உலகம் முழுவதிலும் வாழும் ஐநூறு கோடிக்கும் மேற்பட்ட மக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கும் என்பது நன்றாகத் தெளிந்த ஒன்று.

இலங்கை நேரப்படி வியாழன் அதிகாலை 3.20 மணிக்கு வெடித்த யுத்தம் வளைகுடாவிலும், மத்திய கிழக்கிலும் வாழும் மக்களை நேரடியாகப் பாதிக்கப்போகிறது.

அணு ஆயுதங்களைப் பாவிப்பதில்லை என்ற ஐ.நா. பிரகடனத்தில் அமெரிக்காவும் ஈராக்கும் ஒப்பமிட்டுள்ளன என்பது உண்மைதான். ஆனால் ஆரம்பமாகிவிட்ட யுத்தத்தில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படமாட்டா என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

ஆகையால் இரண்டாம் உலக யுத்தத்தைவிட இன்றைய போர் நாசகாரமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏவுகணைகள் மற்றும் நவீன நாசகார ஆயுதங்களால வளைகுடா, மத்திய கிழக்கு ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் நகரங்கள் துவம்சமாகப் போகின்றன; மக்கள் இறந்தொழியப் போகின்றனர்; ஏன் இரசாயன ஆயுதங்கள், கிருமி பரப்பும் ஆயுதங்கள் என்பவற்றால் ஏனைய உயிரினங்களும் பூண்டோடு அழிந்து பூகோளவியல், சுற்றாடல் சூழல் என்பவற்றை ஏறுமாறாக மாற்றிப் பெரும் இயற்கை அனர்த்தங்களை விளைவிக்கப் போகின்றன.

'நான் எப்போதும் மற்றவர்களைச் சம்பந்தப்படுத்தாமலே எனது முடிவுகளை மேற்கொள்ள விரும்புபவன். எனது நாட்டுப் பாலைவனத்தைப் போலவே எனது முடிவுகள் கடுமையானவையாகவும், குரூரமானவையாகவும் இருக்கும்' — என்று கூறிவரும் ஈராக் ஜனாதிபதி சதாமின் எதற்கும் மசியாத அழுங்குப் பிடிக்கும் —

வளைகுடாவிலும் மத்திய கிழக்கிலும் தனது ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் விட்டுக் கொடுக்க முடியாது என்ற அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நண்டுப் பிடிக்கும் —

இரையாகப் போவது உலகமும், மக்களுமே!

இரு சாராரும் போருக்கு கூஷ்டி உருட்டும் போதே எப்பாடுபட்டும் போரை நிறுத்த ஐ.நா.வால் முடியவில்லை.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தது வெளிப்படையான குற்றம்; ஆனால் அமெரிக்கா ஈராக்கின் இராணுவபலத்தை முற்று முழுதாக உடைத்தெறியத் திட்டம் போட்டது மறைமுகமான குற்றம். இவ்விடயத்தில் ஐ.நா. சபை நடுவு நிலைமை வகித்து தீர்மானம் இயற்றத் தவறிவிட்டது.

மீண்டும் ஓர் உலக யுத்தம் வராமல் தடுக்க வேண்டும் என்ற நோக்குடன் இரண்டாவது உலக யுத்தத்தின் பின் தோற்றுவிக்கப்பட்டதே ஐ.நா. சபை. ஆனால் இப்போது மற்றொரு மகா யுத்தத்துக்கு வழி விட்டுவிட்டு நிற்பது வெட்கத்துக்குரியது; வேதனைக்குரியது. ஸ்தாபக இலட்சியத்தை அதனால் நிறைவேற்றமுடியவில்லை.

# 3 மணி நேரம் நீடித்த முதல் கட்டத் தாக்குதலில்

# ஈராக்கின் 60க்கு மேற்பட்ட இலக்குகள் நாசம்

பாக்தாத் ஜன. 18

ஈராக் மற்றும் குவைத் மீதான முதற்கட்ட ஆகாயத் தாக்குதல் மூன்று மணித்தியாலங்கள் வரை நீடித்தது. நானூற்றுக்கு அதிகமான விமானத் தாக்குதல்கள் அப்போது இடம்பெற்றன. அறுபதுக்கு மேற்பட்ட இலக்குகள் மீது அப்போது குண்டுகள் வீசப்பட்டன. வீசப்பட்ட குண்டுகள் 18 ஆயிரம் தொன் வெடிமருந்துகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தன.

அவ்வளவு குண்டுகளும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானிய நகர் ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அந்த ஒரு அணுகுண்டுக்கு சமனானவை என்று அறிவிக்கப்படுகிறது.

முதல் தாக்குதலின் போது பாக்தாத் நகரின் பிரதான தொலைத் தொடர்பு நிலையம், சர்வதேச விமானத் தளம், ஜனாதிபதி மாளிகை அருகில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஆகியன குண்டு வீச்சுக்கு இலக்காகின.

அதே சமயம் முதல்கட்ட ஆகாயத்தாக்குதல் நினைத்ததிலும் பார்க்க வெற்றிகரமாக முடிவடைந்ததாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஈராக் மற்றும் குவைத் மீதான ஆகாய பிரதேசம் தமது கட்டுப்பாட்டில் வரும் வரை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல் தொடரும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

வெள்ளை மாளிகை முன் நூற்றுக்கணக்கானோர் திரண்டு நின்று போர் வேண்டாம்; சமாதானம் வேண்டும் என்று நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

எண்ணெய்க்காக யுத்தம் நடத்துவதா? என்றும் அவர்கள் கோஷமிட்டனர்.

"எல்லாருமே சதி செய்கிறார்கள். கோர்பச்சேவ் லித்துவேனியர்களைக் கொல்கிறார். புஷ் அரபுக்களை கொலை செய்கிறார்" — என்று இளைஞர் ஒருவர் கூறினார்.

## முதலில் தாக்கிய விமானங்கள் பாதுகாப்பாகத் திரும்பின

பாக்தாத் மற்றும் குவைத் மீது நடத்தப்பட்ட முதல் ஆகாயத் தாக்குதலில் ஈடுபட்ட போர் விமானங்கள் அனைத்தும் பாதுகாப்பாக தமது தலங்களுக்குத் திரும்பின.

இப்படி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

தாக்குதலில் ஈடுபட்ட முதல் அணியில் அமெரிக்கா, பிரிட்டன், சவூதிஅரேபியா மற்றும் குவைத் நாடுகளின் போர் விமானங்கள் இருந்தன.

ஆகாயத் தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னர் போர்க் கப்பல்களில் இருந்து பாக்தாத் மற்றும் குவைத்தை நோக்கி அமெரிக்கா தலைமையிலான நேசப் படைகளால் ஏவுகணைகள் ஏவப்பட்டன.

## "பாலைவனப் புயல்"

வளைகுடா போரின் முதற் கட்டத் தாக்குதலுக்கு "பாலைவனப் புயல்" (Desert Storm) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## ஏவுகணைத் தளம் அழிப்பு

டெல் அவிவ், ஜன 18

ஈராக்கின் மேற்குத் திசையில் உள்ள ஏவுகணைத் தளம் முதல் கட்டத் தாக்குதலின்போது அழிக்கப்பட்டு விட்டதாகவும் — அதனால் இஸ்ரவேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதலை நடத்தும் ஆபத்து கணிசமான அளவு குறைந்துள்ளதாகவும் இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் நேற்று அறிவித்தார்.

## ஆகாயத்தாக்குதல் 10 நாள் நீடிக்கும் என்கிறது அமெரிக்கா

ஈராக் மற்றும் குவைத் மீதான ஆகாயத் தாக்குதல் பத்து நாட்களுக்கு நீடிக்கும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் சேனி நேற்று அறிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

பனாமாவில் ஒருநாளில் முடிவடைந்த அமெரிக்க இராணுவ நடவடிக்கை போன்று வளைகுடா போர் முடிந்துவிடும் என்று நினைத்து விடக்கூடாது.

வளைகுடாப் போர் சிறிது காலம் நீடிக்கும்.

சிவிலியன்கள் உயிரிழப்பு தவிர்க்கப்படும். ஈராக்கின் இராணுவத் தாக்குதல் வல்லமையை அழிப்பதில் தான் எமது படைகள் ஈடுபடும். இராணுவ கேந்திர நிலையங்களே தாக்கப்படுகின்றன.

இலட்சியத்தை அடைவதில் அமெரிக்கப் படைகளுக்கு உள்ள உறுதிப்பாட்டில் எவரும் சந்தேகப்படக்கூடாது.

இப்படி திரு. சேனி சொன்னார்.

முதல் கட்டத் தாக்குதலின் போது அமெரிக்கப் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புப் பற்றிச் செய்தியாளர் கேட்டதற்கு, "பூர்வாங்க அறிக்கைகள் ஊக்கமளிப்பவையாக உள்ளன" என்று மட்டுமே தெரிவித்தார்.

## இலங்கை நேரப்படி அதிகாலை 3.20க்கு போர் ஆரம்பம்

வளைகுடா போர் நேற்று இலங்கை நேரப்படி அதிகாலை 3.20 மணியளவில் ஆரம்பமானது.

சவூதி அரேபியாவில் உள்ள பெரிய அமெரிக்க விமானத்தளம் ஒன்றில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேசப்படைகளின் போர் விமானங்களின் அணி ஒன்று ஈராக் தலைநகர் பாக்தாத்தின் கேந்திர நிலையங்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை முதலில் ஆரம்பித்தன.

போர் ஆரம்பித்ததும் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் "குவைத்தை விடுவிக்கும் நடவடிக்கை ஆரம்பமாகி விட்டது" — என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

போர் ஆரம்பமாகி இரண்டு மணித்தியாலங்கள் கழித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நாட்டு மக்களுக்கு டெலிவிஷன் மூலம் உரை நிகழ்த்தினார்.

உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு;

- ★ குவைத் மீண்டும் ஒரு இறைமையுள்ள சுதந்திர நாடாக மலரும்.
- ★ சட்டபூர்வமான ஆட்சியாளரிடம் குவைத்தை விரைவில் நாம் ஒப்படைப்போம்.
- ★ இப்போரின் போது, ஈராக்கின் அணுசக்தி பலத்தையும் இரசாயன ஆயுத உற்பத்தித் திறனையும் அமெரிக்கப்படைகள் முற்றாக அழிக்கும்.
- ★ ஈராக் வைத்திருக்கும் ஆட்டிலறி ஆயுதங்களின் எண்ணிக்கையையும் பெருமளவில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் அழித்துவிடும்.
- ★ போர் திட்டமிட்டபடி நடைபெறுகிறது. தரைப் படைகள் போரில் தற்போது ஈடுபடுத்தப்படமாட்டா.

இந்த வேளையில்— மூன்று உறுதி மொழிகளை எனது மக்களுக்கு வழங்குகின்றேன்.

1. வளைகுடாப் போர், இன்னொரு வியட்னாமாக மாற அனுமதிக்கப்படமாட்டாது.
2. வளைகுடாவில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகள் ஒரு கை பின்னால் கட்டப்பட்ட நிலையில் யுத்தத்தில் ஈடுபடவில்லை.
3. குவைத்தை ஈராக்கிடமிருந்து விடுவித்த பின்னர், அமெரிக்கப் படைகள் தாயகம் திரும்பும்.

உலகம் இனியும் காத்திருக்க முடியாது. அதனால் தான் இராணுவபலம் மூலம் சதாம் ஹுசேனை குவைத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம்—

இப்படி திரு. புஷ் சொன்னார்.

## துரதிஷ்டம் என்கிறார் குயிலர்

போர் ஏற்பட்டது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் ஜாவியர் பெரஸ் டி குயிலர் கவலை தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டிதர் வகுப்புகள் 20 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் ஆரிய, திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கம் இலவசமாக நடத்தும் பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகள் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை ஆரம்பமாக உள்ளன.

யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் வகுப்புகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சி.ஈ உயர்தர வகுப்பில் தமிழ் மொழியில் திறமைச் சித்தி பெற்றவர்கள் பால பண்டிதர் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பால பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் கலைத்துறை தகுதிகாண் பரீட்சையை தமிழ் மொழியுடன் சித்தி அடைந்தவர்களும் பண்டிதர் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் சங்கத்தின் செயலாளர் திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] தெரிவித்தார். [அ]

## அனுமதி இல்லை

யாழ்ப்பாணம். ஜன 18

யாழ். மாவட்டத்தில் புதிதாக தனியார் கல்வி நிலையங்கள் எதுவும் ஆரம்பிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக தனியார் கல்வி நிறுவன ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் மீதான விதிமுறைகள் சரிவர நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ 72)

## நினைவஞ்சலியும் உதைபந்தாட்ட போட்டியும்

யாழ்ப்பாணம், ஜன. 18

விளையாட்டு, கலைத் துறைப் பிரமுகரும் சமூகத் தொண்டருமான இ. க. குமாரசாமியின் நினைவஞ்சலிக் கூட்டமும் இது தொடர்பான உதைபந்தாட்டப் போட்டியும் படத் திறப்பு விழாவும் நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ-எ)

## விரிவுரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 18

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு 1991 ஆம் ஆண்டுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகின. (இ 6)

# ஓய்வூதிய அனுமதிக்கடித 'பிரதியுடன் செயலகம் அலையும் ஓய்வூதியர்கள்

## கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை

யாழ்ப்பாணம், ஜன. 18

ஓய்வூதியத்துக்கு விண்ணப்பித்து விட்டு நீண்டகாலம் காத்திருந்த பலருக்கு தற்போது கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத் தலைமையகத்திலிருந்து ஓய்வூதிய அனுமதிக் கடிதங்களின் பிரதிகள் தபாலில் வந்து சேர்ந்துள்ளன. ஆனால் அனுமதிக் கடிதங்கள் இன்னும் யாழ் செயலக ஓய்வூதியக் கிளைக்கு வந்து சேரவில்லை.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலையில், இந்த ஓய்வூதியர்கள், யாழ். செயலக ஓய்வூதியக் கிளைக்கு, தமக்கு அனுப்பப்பட்ட ஓய்வூதிய அனுமதிக் கடிதப் பிரதியுடன் தினமும் அலைகின்றனர்.

கடந்த 87, 88, 89, 90 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற விண்ணப்பித்து விட்டுக் காத்திருந்த சுமார் 400 பேருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். அரச அதிபர் மூலமும், ஓய்வூதியப் பிரிவு உதவி அதிகாரிகள் வாயிலாகவும் பல மட்டங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள ஓய்வூதியக்கிளை அதிகாரிகள், கொழும்பிலுள்ள ஓய்வூதியத் திணைக்களத்துக்கு நேரடியாகச் சென்று விடுத்த வேண்டுகோளும் பயனளிக்கவில்லையாம்.

பின்னர் இறுதியாக கடந்த மாதம் கொழும்பு சென்றிருந்த அதிகாரி ஒருவர் நேரடியாக 45 பேரின் ஓய்வூதிய அனுமதிக் கடிதங்களைக் கொண்டு வந்திருந்தார்.

அதன்பின் இன்றுவரை ஏனைய அனுமதிக் கடிதங்கள் வந்து சேரவில்லை.

ஏனையவை தபாலில் சேர்க்கப்பட்டு விட்டன என்று தற்போது கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத் தலைமையகம் தெரிவிக்கிறது. ஆனால் இதுவரை அவை யாழ். செயலகம் வந்து சேரவில்லை.

ஓய்வூதிய அனுமதிக்கடிதங்கள் கொழும்பில் இருந்து செயலகம் வந்து சேர்ந்ததும் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் என்றும், ஓய்வூதியர்கள் செயலகம் வந்து அலையத் தேவையில்லை என்றும் யாழ். செயலக ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-6)

## அடக்கு முறைகளை நிறுத்த கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழீழ மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் சகல அடக்குமுறைகளையும் நிறுத்தி பாடசாலைகளை ஒழுங்காக இயங்கச் செய்து பரீட்சைகளை நடத்த நடவடிக்கை எடுங்கள்!

யாழ். மாவட்ட மாணவர்கள் சார்பில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தமிழீழ ஆசிரியர்கள், மாணவர்களை சிங்களப்படையினர் கைது செய்வதையும், கொலை செய்வதையும் நிறுத்த வேண்டும். பாடசாலைகள் மீதும் கல்வி நிலையங்கள் மீதும் நடத்தப்படும் குண்டுவீச்சுத் தாக்குதல்களையும் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலையை நிறுத்த வேண்டும்.

தென் தமிழீழ மாணவர்கள் கல்வியை தொடர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கி அவர்கள் ஒழுங்கான கல்வியைத் தொடர வேண்டிய நடவடிக்கைகளை எடுங்கள்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நாளை இறுதி நாள்

கொழும்பு, ஜன. 18

1989 இல் நடந்த ஜி.சி.ஈ. பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பிக்கும் கடைசித் தினம் நாளை 19 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-எ)

## பணிப்பாளர் சபை

தென்மராட்சி, ஜன. 18

சாவகச்சேரி, பனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு 9 பேர் கொண்ட பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நெடுங்குளம் வீதியில் காணி வருமானத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யோகநாதன் இந்திராதேவி 202/6, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். [15539]

வர்த்தகமும் நிதியும் [உயர்தர வகுப்புகளுக்குரியது] உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியனவற்றுடன் வெளிவந்து விட்டது தொகுப்பு; தேவராஜன், ஜெயராமன் B. Com (Hons) விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5583]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [15386]

### வகுப்புக்கள்

Steno (English) Home Science Diploma வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. சேர விரும்புவோர் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன் (19 - 01 - 90) எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும். அத்துடன் G. S. Q. (Bio) வகுப்புக்கள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதியர் உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (15545)

### மணமக்கள் தேவை

யாழ். இந்து 33 வயது நிரம்பிய பயிற்றப்பட்ட செவ்வாய் குற்றமற்ற கிரகபாவம் கூடிய மணமகனுக்கும் அவரின் சகோதரி பயிற்றப்பட்ட ஆசிரியை 32 வயது நிரம்பிய 8 செவ்வாயுள்ள மணமகளுக்கு மாற்று விவாகம் செய்ய மணமக்கள் தேவை. தொடர்பு: ABCDE, விவாகப் பொருத்துனர் 328 நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (15548)

### தேவை

வாடகைக்கோ அல்லது விலைக்காகவோ எமக்கு உடனடியாக 3KU, 4KU ஜெனரேற்றர் (Generator) தேவை. மண்ணெண்ணெய் அல்லது டீசலில் இயங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். பொ. சிலன் 250 A, சுருத்தி துறை வீதி, (நல்லூர் ஆலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (15547)

# யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடங்கள்

கீழ் வரும் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி:

## பொது முகாமையாளர் 101. 3

**சம்பளத் திட்டம்:**

2005 - 3055 இத்துடன் கூட்டுறவுப்
75x6 - 100x6 பணியாளருக்கான படிகள்

**வயதெல்லை:**

31 - 01 - 91 இல் 23 - 50 க்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும். விசேட தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளை பொறுத்த மட்டில் வயதின் மேல் எல்லை தளர்த்தப்படலாம். கூட்டுறவுச் சேவையிலுள்ள நிரந்தர பணியாளருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது.

**தகுதிகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 4 ஆம் சம்பளத் திட்ட பதவியில் 3 வருட அனுபவம் அல்லது 5 ஆம் சம்பளத் திட்டத்தில் 6 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்குச் சமனான தகுதிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவ பதவி ஒன்றின் 10 வருடத்திற்கு குறைவில்லாத அனுபவம். இதில் 3 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவி வகித்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திர சான்றிதழ் / க. பொ. த. உயர்தரப் பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியுடன் வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ பதவியில் 12 வருடத்திற்கு குறைவில்லாத அனுபவம். இதில் 3 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியை வகித்திருத்தல் வேண்டும்.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை பிறப்பு, கல்வி மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தலைவர், யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், யாழ். கோப் டெக்ஸ், இருபாலை வீதி, கோண்டாவில் எனும் முகவரிக்கு 11 - 02 - 1991 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:- முன்னர் விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

(சி/5649) தலைவர்.

# 3 மணி நேரம் நீடித்த....

(3 பக்கத் தொடர்ச்சி)

வளைகுடா நெருக்கடிக்கு இராஜதந்திர ரீதியில் அமைதித் தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் விரயமாகியது துரதிருஷ்டவசமானது என்றும் அவர் சொன்னார்.

# போருக்கு உத்தரவிட முன்...!

போருக்கு உத்தரவிடுவதற்கு முன்னர், ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது குடும்பத்துடன் பதினைந்து நிமிடங்களைக் கழித்தார்.

அதன் பின்னர் கிறிஸ்தவ போதனையாளர் பில்லி கிரஹாமுடன் ஆத்மீக உரையாடலை நடத்தினார் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன் பின்னர் வெள்ளை மாளிகையில் தனது ஓவல் அறையில் இருந்து ஆலோசனை நடத்தினார்.

வண. பில்லி கிரஹாம் ஜனாதிபதி புஷ்ஷின் ஆத்மீக ஆலோசகர் என்றும் - போர் பிரகடனம் செய்த அன்று கிரஹாம் புஷ்ஷின் விருந்தாளியாக வெள்ளை மாளிகையில் தங்கியிருந்தார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நாட்டின் கேந்திர விநியோக நிலையங்களுக்கு போதுமான எரிபொருளை அனுப்பும்படி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட பின்னரே, ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் போர்ப் பிரகடனத்தில் கையெழுத்திட்டார்.

# ஹுசேனின் வானொலி உரை

பாக்தாத், ஜன. 18

போர் ஆரம்பித்த சில மணித்தியாலங்கள் கழித்து ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் பாக்தாத் வானொலியில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

சகல யுத்தங்களுக்குமான (Mother of all battles) தாய் யுத்தம் ஆரம்பமாகி விட்டதாக ஜனாதிபதி சதாம் ஹுசேன் அப்போது அறிவித்தார்.

புஷ் அரக்கனும் (Devil Bush) சியோனிச கிரிமினல்களும் [Criminal Zionists] பெரிய யுத்தத்தை ஆரம்பித்து விட்டனர் எனவும் அவர் ஆக்ரோஷத்துடன் சொன்னார்.

கடவுளின் உதவியுடன் வெற்றிகாணுவோம் என்றும் அவர் சூளுரைத்தார்.

"சகல யுத்தங்களுக்கும் தாயான இந்த யுத்தம் கடவுளின் விசுவாசிகளுக்கும் அதற்கு எதிரானவர்களுக்கும் இடையே நடைபெறுகிறது. கடவுள் எம்பக்கம் தான் இருக்கிறார். அதனால் வெற்றியும் எமக்கே. சவூதி அரேபியா ஆட்சியினர் துரோகம் செய்கிறார். இந்த யுத்தத்தில் அவர்கள் தூக்கி எறியப்படுவார்கள். இந்த யுத்தத்தில் ஜெருசலம் கோலேன் குன்றுப் பிரதேசங்கள் மற்றும் லெபனான் ஆகியன மீட்கப்படும். இரவு வேளையில் அமெரிக்கப் படைகள் ஆரம்பித்த இத்தாக்குதல் எமக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை" - இப்படி ஜனாதிபதி சதாம் ஹுசேன் சொன்னார்.

ஈராக் நேரப்படி அதிகாலை 2. 30 மணிக்கு ஜனாதிபதி வானொலியில் பேசினார்.

# துருக்கியும் போரில் இறங்கும்

ஈராக்குக்கு எதிராக போர் நடத்தத் தயாராக இருப்பதாக துருக்கி நேற்று அறிவித்தது. ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் இரண்டாவது போர்முனையை உருவாக்கப்போவதாகவும் துருக்கி அரசு கூறியுள்ளது.

# குவைத்தில் மட்டுமே பிரான்ஸ் தாக்குதல் நடத்துமாம்!

பாரிஸ், ஜன. 18

வளைகுடா யுத்தத்தில் குவைத்தில் உள்ள ஈராக் படைகள் மீது நடத்தப்படும் தாக்குதலில்தான் பிரெஞ்சுப் படைகள் கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல்களில் பிரெஞ்சுப் படைகள் பங்குபற்றா என்று பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் நேற்று அறிவித்தார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் 678 இலக்கத் தீர்மானம், குவைத்தில் இருந்து ஈராக் படைகளை வெளியேற்றவே அனுமதி வழங்கியுள்ளது என்றும் பிரெஞ்சு அரசு அறிவித்து உள்ளது.

ஈராக் நாட்டின் மீது இராணுவ பலத்தைப் பிரயோகிக்க அத்தீர்மானம் அனுமதி வழங்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இதே வேளை- அமெரிக்காவின் கட்டளைப்படியே வளைகுடாப் போரில் பிரெஞ்சுப் படைகள் செயல்படும் என்றும் பிரெஞ்சு அரசு அறிவித்துள்ளது.

# வெளி நிலை விரிவுரைகள்

## கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

- ★ கலை மாணி B.A.
- ★ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
- ★ வணிகமாணி B. Com

க. பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும், விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விரிவுரைகள் 20 - 1 - 1991 ஞாயிறு பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

உதவிப்பதிவாளர்

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, [illegible] வீதி, [illegible]. (15535)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் ஏவுகணைத் தாக்கு!

சவூதி அரேபியாவின் முக்கிய இலக்குகள் மீது ஈராக் நேற்று பதிலடியாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

தரையிலிருந்து தரைக்கு பாயும் ஸ்கட் ஏவுகணைகளை ஐந்தை ஈராக் ஏவியது.

சவூதியின் தெற்குப்புற நகர் ஒன்றில் எண்ணெய் வயல் ஒன்று ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.

சவூதி தலைநகர் ரியாத் மீது ஏவப்பட்ட ஏவுகணை ஒன்றை, சவூதி விமானப்படை நடுவானில் வைத்து சுட்டு வீழ்த்தியது.

போர் மூண்ட பின்னர் ஈராக் நடத்திய முதல் பதிலடி இது என்று சொல்லப்பட்டது.

# ஈராக்கின் பதில் தாக்குதல் பாரதூரமானதாக இல்லை

நியூயோர்க், ஜன. 18

முதல் கட்ட ஆகாயத் தாக்குதலின் போது ஈராக் நடத்திய எதிர்த் தாக்குதல் பாரதூரமானதாக இல்லை என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார்.

சவூதி அரேபிய எல்லைப்புற நகர் ஒன்றின் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுவதையும் அவர் மறுத்தார்.

ஆரம்ப ஆகாயத் தாக்குதலின் போது ஈராக் படைகளுக்கு அவ்வளவு சேதம் ஏற்பட்டது போல் தெரியவில்லை என்றும்—

முதல் கட்ட ஆகாயத் தாக்குதலின் போது ஈராக்கின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் கேந்திர ஸ்தானங்கள் அவ்வளவாகத் தாக்கப்படவில்லை என்றும்—ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

# ஈராக் படைகள் சரணாகதி . எகிப்து நேற்று அறிவிப்பு

கெய்ரோ, ஜனவரி 18

குவைத்தில் நிலைகொண்டுள்ள ஈராக்கிய படையினரில் பெரும்பாலானோர் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படையினரின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சரணடையத் தொடங்கியிருப்பதாக எகிப்தின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான 'மினா' நேற்று அறிவித்தது.

# பிடிவாதத்தை இனியாவது ஈராக் கைவிட வேண்டும்

மாஸ்கோ, ஜனவரி 18

இனியாவது குவைத்தில் இருந்து ஈராக் தனது படைகளை விலக்க முன்வரவேண்டும்.

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்று டெலிவிஷனில் பேசுகையில் முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

வளைகுடாப் போர் ஏற்பட ஈராக்கின் பிடிவாதமே காரணமாக அமைந்தது என்றும்—

உலக அபிப்பிராயத்தை ஈராக் மதிக்கத் தவறிவிட்டது என்றும் அவர் குற்றஞ் சுமத்தினார்.

இதற்கிடையில்—

மேலும் அழிவில் இருந்து தப்பிக்கொள்ள குவைத்தில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ளும்படி ஈராக்கை ஐரோப்பிய சமூக அமைப்பு நாடுகளும் நேற்று கேட்டுக் கொண்டன.

நிபந்தனையற்ற முறையில் உடனடியாக குவைத்தை விட்டு வெளியேறும்படி ஈராக்கை அவசர வேண்டுகோள் ஒன்றின் மூலம் நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் கேட்டுக்கொண்டனர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
1959 - 06 - 13

மறைவு:
1990 - 12 - 19

## திருமதி தமயந்தி சிறீரவீந்திரா

அன்பின் குலவிளக்கே வற்றாத சொல்தலைவி - நீர்
மழலை பெற்று மகிழ வைப்பாய் என்றோர்
வாழ்வை - நீயோ
மாறாத்துயரில் ஆழ்த்தி எங்கு சென்றாய்?
தண்ணீர் தெளித்து தரைக்கோலம் போட்ட உனக்கு
கண்ணீர் தெளித்து கனிக்கோலம் போடுகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்;
கணவன், பெற்றோர், மாமி,
சகோதரன், மைத்துனர், பெறாமக்கள்.
[15551]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.